

கர்நாடக மாநிலம், பெங்களூரில் சமீபத்திய UGC வரைவு நெறிமுறைகள் குறித்து நடைபெற்ற மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், நேற்று முன்தினம் (05.02.2025) உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலந்து கொண்டார்.

## தேசியக் கல்விக் கொள்கையை புறவழியாக அமல்படுத்த முயற்சிக்கும்

# யு.ஜி.சி. வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வேண்டும்!

### பெங்களூருவில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் – அமைச்சர் கோவி.செழியன் வலியுறுத்தல்!

பெங்களூர், பிப். 7-

"தேசியக் கல்விக் கொள்கையை புறவழியாக அமல்படுத்த முயற்சிக்கும் யுஜிசி வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெற வேண்டும்" என்று பெங்களூருவில் நடைபெற்ற கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் அமைச்சர் கோவி.செழியன் வலியுறுத்தினார்.

கர்நாடக மாநிலம், பெங்களூருவில் நேற்று முன்தினம் (5.2.2025) UGC வரைவு நெறிமுறைகள் குறித்து நடைபெற்ற மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் UGC வெளியிட்ட வரைவு நெறிமுறைகளை திரும்பப் பெறக் கோரி உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் ஆற்றிய உரை:-

இந்த அரிய வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

UGC விதிமுறைகள் குறித்தான இந்த முக்கியமான மாநாட்டில் தமிழ்நாடு மாநிலத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துவது எனக்கு கிடைத்துள்ள பெரும் பேறாகும். கல்வி, சமூக நீதி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் தமிழ்நாடு எப்பொழுதும் முன்னணியில் உள்ளது. கல்வியானது மாணவர்களுக்கு நன்மை பயக்கும்; என்பதால் அவர்களின் கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும் என்பதில் தமிழ்நாடு உறுதியாக உள்ளது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்களின் நியமனம் மற்றும் பதவி உயர்வுக்கான குறைந்தபட்சத் தகுதிகள் மற்றும் உயர்கல்வியில் தரங்களைப் பேணுவதற்கான நடவடிக்கைகள், இளநிலை மற்றும் முதுநிலை சேர்க்கைகான நுழைவுத் தேர்வு, 2024 மற்றும் 2025 பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (UGC) சட்டம், 1956இன் கீழ் அண்மையில் வெளியிடப்பட்ட வரைவு நெறிமுறைகள் வருங்காலத்தில் மாநிலத்தின் சுயாட்சியினை முழுவதுமாகப் பறிக்கும் வகையில் உள்ளது.

இந்த விதிகளின் மையப்படுத்தப்பட்ட அணுகுமுறை ஒன்றிய-மாநில உறவுகளுக்குக் கடுமையான அச்சுறுத்தலையும் ஏற்படுத்துகிறது. UGC சட்டம், 1956-இன் பிரிவு 26-இன் கீழ், உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வரைவு ஒழுங்காற்று விதிகள் (UGC Draft Regulations 2024 and 2025) மாநிலப் பல்கலைக் கழகச் சட்டங்களை முறியடிக்கும் நோக்கம் கொண்டதாக இருப்பது கூர்ந்து கவனிக்கத்தக்கது. வரைவு UGC நெறிமுறைகள் ஒரு வழிகாட்டு நெறிமுறைகளே ஆகும்.

மேலும், இந்த வரைவு மாநிலச் சட்டங்களைப் போலல்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுவால் வடிவமைக்கப்பட்டுள்ளது. வரைவு UGC விதிமுறைகளை அமல்படுத்தும் முயற்சி UGC-யின் அத்துமீறலைத் தவிர வேறில்லை. சட்டப்பிரிவு 12(d)-இன் கீழ், UGC-இன் அதிகாரங்கள் வெறும் பரிந்துரை மட்டுமே. அது உயர்கல்வியில் தரநிலைகள் குறித்து ஆலோசனை கூறலாம். ஆனால், அதை அமுல்படுத்த மாநிலங்களைக் கட்டாயப்படுத்திட முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த வரைவு விதிமுறைகள், அதிகாரப் பிரிவினை மற்றும் கூட்டாட்சி முறை ஆகிய இரண்டும் அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களைச் சீர்குலைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான முக்கியமான அரசியலமைப்புச் சிக்கலை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. கல்வி நமது அரசியலமைப்புச் சட்டத்தின் பொதுப் பட்டியலில் (Concurrent List) உள்ளது. மத்திய அரசுடன் ஒருங்கிணைந்து பல்வேறு திட்டங்களை மேலோட்டமாகப் பார்க்கவும் செயல்படுத்தவும் மாநில சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அரசமைப்புச் சட்டத்தின் 254(1) பிரிவு, ஒரு மாநிலச் சட்டம் மத்தியச் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால், மத்தியச் சட்டமே மேலோங்கும் என்பதை எடுத்துக்காட்டுகிறது. இருப்பினும், இது நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டங்களால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மட்டுமே பொருந்தும் மற்றும் இந்த UGC வரைவு விதிமுறைகள் போன்ற பிரதிநிதித்துவ சட்டங்களுக்குப் பொருந்தாது.

**ஆலோசனை கூறலாம்!**

மேலும், UGC வெளியிடப்பட்டுள்ள வரைவு நெறிமுறைகள் பல்கலைக்கழகங்களில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கான உண்மையான முயற்சியை விட தேசியக் கல்விக் கொள்கையை புறவழியாக அமுல்படுத்துதையே பிரதிபலிக்கின்றது. இந்த ஒழுங்குமுறைகள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல், பிரதிநிதித்துவ சட்டத்தின் போர்வையில் திணிக்கப்படுகின்றது. மாண்பமை உச்சநீதிமன்றத்தில் கல்யாணி மதிவாணன் என்பவருக்கு எதிராக கே.வி. ஜெயராஜ் தொடர்ந்த வழக்கில், UGC விதிமுறைகளை அரசு ஏற்காத பட்சத்தில் மாநிலப் பல்கலைக்கழகங்கள் கட்டாயம் இதனைப் பின்பற்ற வேண்டும் என்பதில்லை என்று தீர்ப்பளித்தது. எனவே, விதிமுறைகளை வகுப்பதில் ஒவ்வொரு கட்டத்திலும் மாநிலங்களின் ஒப்புதல் மற்றும் ஆலோசனை பெறுவது முக்கியமாகும்.

**சிதைக்கும் முயற்சியாகும்!**

இந்த விதிகளுக்குப் பின்னால் தெளிவான அறிவியல் காரணம் இல்லை மற்றும் எந்த ஆய்வுக் கண்டுபிடிப்புகளும் இல்லை. பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு ஏதேனும் நிபுணர்களை கலந்தாலோசித்ததா அல்லது மாணவர்கள் மற்றும் நிர்வாகிகள் எழுப்பிய உண்மையான சந்தேகங்களை நிவர்த்தி செய்ததா என்பதும் தெளிவாக இல்லை. UGC மற்றும் தேசியக் கல்விக் கொள்கை (NEP) ஆகியவற்றின் வழிகாட்டுதல்கள், நமது நாட்டிற்கு அதன் பொருத்தம் மற்றும் பயனைப் பற்றி எந்தச் சிந்தனையையும் கருதாமல் மேற்கத்தியத்தை நகலெடுப்பதாகத் தெரிகிறது.

இந்திய அரசாங்கத்தால் நடத்தப்பட்ட பொருளாதார ஆய்வு உட்பட பல வேலை வாய்ப்பு ஆய்வுகள், கல்வி முடிவுகள் மோசமாக இருப்பதாகவும், அதிக எண்ணிக்கையிலான பட்டதாரிகள் வேலை கிடைக்காமல் போராடுவதாகவும் காட்டுகின்றன. இந்த வரைவு விதிமுறைகள், கல்வித் தரம் குறித்த தீவிரப் பிரச்சினைகளைத் தீர்க்காமல், ஒப்பனை மற்றும் மேலோட்டமான கருத்தை முன்மொழிகிறது மற்றும் எந்த விதமான தேவை மதிப்பீடு அல்லது அறிவியல் அடிப்படையின்றி ஏற்கனவே நிறுவப்பட்ட நடைமுறைகளைச் சிதைக்கும் முயற்சியாகும்.

**உயர்கல்வியில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்!**

உயர்கல்வியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக உள்ளது. அண்மையில் வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு அரசு ரூ.8,212 கோடிகளை ஒதுக்கியது, இது ஒட்டுமொத்த தேசத்திற்கும் ஒன்றிய அரசின் மொத்த ஒதுக்கீட்டில் 17% ஆகும். முறையான நிதியுதவி இல்லாமல் கல்வி முறையில் புதிதாக விதிகளைச் சுமத்துவது நியாயமற்றது மற்றும் ஏற்றுக் கொள்ள முடியாதது. தமிழ்நாட்டில் உள்ள பொதுப் பல்கலைக்கழகங்கள் மாநில சட்டமன்றச் சட்டங்கள் மூலம் உருவாக்கப்பட்டு, அரசின் நிதியுதவியுடன் சம வாய்ப்புகள் மற்றும் இடஒதுக்கீடு உள்ளடக்கிய சமூக நீதியுடன் செயல்பட்டு வருகின்றன. துணைவேந்தர்களுக்கான தேடல் மற்றும் தேர்வுக் குழுக்களில் இருந்து மாநில அரசு ஒதுக்கப்படுவதைத் தமிழ்நாடு எதிர்க்கிறது. மாநில அரசின் உறுப்பினர் ஒப்புதல் இன்றி எடுக்கப்படும் துணைவேந்தர் நியமனம் தொடர்பான முடிவுகள் பல்கலைக்கழக நிர்வாகத்தில் மாநில சுயாட்சியைச் சிதைக்கும் முயற்சியாகும்.

**கல்வியின் தரத்தை சீரழித்துவிடும்!**

மாநில சட்டப் பேரவையின் சட்டத்தின் மூலம் மாநில அரசுப் பல்கலைக்கழகங்களை நிறுவியுள்ளது. எனவே, மாநிலப் பல்கலைக்கழகங்களின் மீது மாநில அரசுக்கு முதல் உரிமை உள்ளது மற்றும் துணைவேந்தர்களுக்கான தேடல் குழுவை அமைப்பதற்கான சட்டப்பூர்வ உரிமையை மாநில அரசு பெற்றிருக்க வேண்டும். கல்வியியலாளர்கள் அல்லாதவர்களை துணைவேந்தர்களாக நியமிக்கும் விதிகள் கவலைக்குரியதாக உள்ளது. பல்கலைக்கழகங்களுக்கு கல்வியாளர்கள் மற்றும் நிர்வாகம் இரண்டையும் புரிந்து கொள்ளும் தலைவர்கள் தேவை; இவர்கள் வணிகத்தில் மட்டும் கவனம் செலுத்தும் நபர்கள் அல்ல. இந்த விதிமுறைகளை அமல்படுத்துவது கல்வியை வெறும் வியாபாரமாக மாற்றி அதன் தரத்தைச் சீரழித்துவிடும்.

**நிதிநெருக்கடியை அதிகரிக்கும்!**

ஆசிரியர்கள் நியமனத்தில், NET/SET தேர்வை மட்டுமே அளவு கோலாகக் கொண்டு தொடர்பில்லாத பாடங்களில் ஆசிரியர்களை கற்பிக்க செய்வது மாணவர்களின் கற்றல் விளைவுகளைப் பாதிக்கக் கூடியதாகும். திறமையான அறிவுப் பரிமாற்றத்திற்கு ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களில் நிபுணத்துவம் பெற்றிருக்க வேண்டும். பின்தங்கிய பின்னணியைச் சேர்ந்த மாணவர்கள் மீது நியாயமற்ற சுமையை ஏற்படுத்தும் பொது நுழைவுத் தேர்வுகளை தமிழ்நாடு எப்போதும் எதிர்க்கிறது. உயர்கல்வியில் 47% என்ற தமிழ்நாட்டின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (GER) எங்களின் கொள்கைகளின் வெற்றியைக் காட்டுகிறது. இளங்கலை மற்றும் முதுகலை மாணவர் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வுகள் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தைப் பாதிக்கும், குடும்பங்களுக்கு நிதி நெருக்கடியை அதிகரிக்கும்; பயிற்சி நிலையங்களை அதிகரிப்பதையே இந்த நுழைவுத் தேர்வு ஊக்குவிக்கிறது.

தற்போது மத்திய பள்ளிக் கல்வி வாரியம் (CBSE) உட்பட அனைத்துப் பள்ளி வாரியங்களும் ஏற்கனவே பல தேர்வுகள் மற்றும் பொது தேர்வுகள் மூலம் மாணவர்களை மதிப்பீடு செய்கின்றன. அதிக போட்டி நிறைந்த நுழைவுத் தேர்வுகள், தற்போதுள்ள தேர்வுகளை அர்த்தமற்றதாக்கி, மாணவர்களுக்கு மனச்சுமையை ஏற்படுத்தும். இது நியாயமற்றது என்பதுடன் கற்றல் விளைவுகளில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

**ஜனநாயக விரோதமானவை!**

ஆண்டுக்கு இருமுறை சேர்க்கை மற்றும் பல நுழைவு மற்றும் பல வெளியேறுதல் (Multiple Entry and Multiple Exist (MEME)) போன்றவை கல்வி முறையை முற்றிலும் சீர்குலைக்கும். இந்தச் சேர்க்கைகள் கட்டமைப்பு சவால்களை உருவாக்குகின்றன, மாணவர்களைத் தனித்தனிக் குழுக்களாகப் பிரிக்கின்றன மற்றும் வரையறுக்கப்பட்ட கற்பித்தல் வளங்களில் அழுத்தம் கொடுக்கின்றன. MEME இடைநிற்றல்களை ஊக்குவிக்கிறது, இது மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்கும் மாணவர்களைத் தக்கவைப்பதை மேம்படுத்துவதற்கும் மேற்கொள்ளப்படும் தமிழ்நாடு அரசின் முயற்சிகளுக்கு எதிரானது. இந்த விதிகள் பின்பற்றப்படவில்லையெனில் பல்கலைக்கழகங்கள் பட்டங்கள் வழங்குவதை நிறுத்தும் பட்டங்களை ரத்து செய்யும் தண்டனை நடவடிக்கை என்பவையெல்லாம் கொடுமையானவை மற்றும் ஜனநாயக விரோதமானவை.

இந்தத் தீங்கான விதிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டும் என்றும், ஜனநாயக முறையில் உயர்கல்வியை உருவாக்க மாநிலங்களுடன் இணைந்து செயல்படுமாறும் ஒன்றிய அரசை தமிழ்நாடு வலியுறுத்துகிறது. மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களின் உரிமைகளுக்காக தமிழ்நாடு தொடர்ந்து போராடும். நமது கல்வி அமைப்பில் சமூக நீதியின் அடித்தளத்தைப் பாதுகாப்பதற்கும், கல்வி அதிகாரமளிப்பதற்கான ஒரு கருவியாக இருப்பதை உறுதி செய்வதற்கும் நாங்கள் உறுதி பூண்டுள்ளோம்.

இந்த மாநாட்டிற்கு முதலமைச்சர், துணை முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்; மீண்டும் ஒருமுறை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் ,,உத்திரமேரூர் முன்னாள் ஒன்றிய செயலாளரும் முன்னாள் பேரூராட்சி தலைவரும் கழக தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இரா.நாகன் நேற்று முன்தினம் (5.2.2025) காலை உடல் நலக்குறைவால் இயற்கையெய்தினார். அவரது உடல் உத்திரமேரூரில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினர். மேலும் திருக்கழுக்குன்றம் ஒன்றிய குழு பெருந்தலைவர் டாக்டர் ஆர்டி.அரசு, ஒன்றிய செயலாளர்கள் கெ. ஞானசேகரன், டி. குமார், சரவணன், பேரூர் செயலாளர் பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர்எஸ். சசிகுமார், துணைத் தலைவர் இளமதி கோவிந்தராஜன், முன்னாள் பேரூராட்சி தலைவர் சுமதி குணசேகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் சஞ்சய் காந்தி, மாவட்ட பிரதிநிதி சச்சிதாஸ், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் குமரன் உள்ளிட்ட தி.மு.க. கட்சி கிளை கழக செயலாளர்கள், மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.



தலைமைச் செயற்குழு உறுப்பினர் – கழகத்தின் மூத்த முன்னோடி இரா. நாகன் இயற்கை எய்தியதை முன்னிட்டு நேற்று (6.2.2025) காலை அவரது இல்லத்தில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மலர்களை வைத்து அஞ்சலி செலுத்தினார். மாவட்ட கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. மற்றும் சட்டத்துறை இணைச்செயலாளர் சூர்யா வெற்றி கொண்டான், ஒன்றிய பெருந்தலைவர் ஆர்.டி.அரசு, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஞானசேகரன், குமணன் ஆகியோர் உடனிருந்தனர்.

## விருதுநகர் மாவட்ட பட்டாசு ஆலையில் விபத்து!

# உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நிதி உதவி!

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, பிப். 7-

விருதுநகர் மாவட்டம் சின்னவாடி கிராமத்தில் இயங்கி வரும் தனியார் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

விருதுநகர் மாவட்டம் மற்றும் வட்டம், சின்னவாடி கிராமத்தில் இயங்கிவரும் தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலையில் நேற்று முன்தினம் (05.02.2025) பிற்பகல் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் அருப்புக்கோட்டை வட்டம், வதுவார்பட்டியைச் சேர்ந்த திருமதி.இராமலட்சுமி (வயது 50) க/பெ.கோனப்பா என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் காயமடைந்து விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி.முருகேஸ்வரி (வயது 55), மாணிக்கம் (வயது 50), திருமதி.மகாலட்சமி (வயது 48), திருமதி. வீரலட்சமி (வயது 37) சைமன் டேனியல் (வயது 33) மற்றும் திருமதி.கஸ்தூரி (வயது 33) ஆகிய ஆறு நபர்களுக்கு சிறப்புச் சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு நான்கு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## திருப்பரங்குன்றத்தில் – பொது அமைதி மற்றும்

# மத நல்லிணக்கம் பேண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன!

### மதுரை மாவட்ட ஆட்சியர் தகவல்!

மதுரை, பிப்.7-

திருப்பரங்குன்றத்தில் பொது அமைதி மற்றும் மத நல்லிணக்கம் பேண அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

கடந்த 04.12.2024 அன்று மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டம், திருப்பரங்குன்றம் பழனியாண்டவர் கோவில் தெருவில் புதியதாக மலை மேல் உள்ள தர்ஹாவில் கந்தூரி செய்பவர்களுக்கு அனைத்து வசதியும் உள்ளன என்ற வாசகம் பொருந்திய அறிவிப்பு பலகையினை தர்கா மேனேஜிங் டிரஸ்டியினரால் வைக்கப்பட்டுள்ளதாக, திருக்கோயில் மூலம் திருப்பரங்குன்றம் காவல்துறையினருக்கு புகார் அளிக்கப்பட்டது, அதன் அடிப்படையில் மேற்படி வாசகம் நீக்கம் செய்யப்பட்டது.

திருப்பரங்குன்றம் மலையில் 25.12.2024 அன்று காலை 09.00 மணியளவில் கந்தூரி (ஆடு பலியிடுதல்) கொடுப்பதற்கு 5 நபர்கள் மலை ஏற சென்ற போது அங்கு பணியிலிருந்த காவலர்கள் தடுத்ததால் கந்தூரி கொடுப்பதற்கு அனுமதி வழங்க கோரி ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனை தொடர்ந்து இஸ்லாம் சமூகத்தினர் மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் முறையிட்ட தன் பேரில், கடந்த 31.12.2024-ம் தேதி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியரின் தலைமையில் அமைதிப்பேச்சு வார்த்தை கூட்டம் நடத்தப்பட்டது. கூட்டத்தில் ஏற்கனவே கடந்த ஆண்டுகளில் நடைமுறையிலுள்ள வழிபாட்டு முறைகளை இந்த ஆண்டிலும் தொடர வேண்டும் என்றும், மேற்படி மலை மீது கந்தூரி கொடுக்கும் நடைமுறை தொடர்பாக, போதிய ஆதார ஆவணங்களை மேற்படி தர்ஹா தரப்பினர் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை ஆகியோரால் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதால் இந்நேர்வு தொடர்பாக உரிய நீதிமன்றத்தின் மூலமாக பரிகாரம் தேடிக்கொள்ளவும், சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை கருத்தில் கொண்டு முடிவு செய்யப்பட்டது. ஆனால், மேற்படி தீர்மானங்களை ஏற்றுக் கொள்ள மறுப்பு தெரிவித்து திருப்பரங்குன்றம் ஹஜ்ரத் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா அவுலியா தர்ஹா மற்றும் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தீர்மானத்தில் கையொப்பம் செய்யாமல் சென்று விட்டனர்.

மேலும், கடந்த 18.01.2025 அன்று சந்தனக்கூடு விழாவினை முன்னிட்டு, திருப்பரங்குன்றம், ஹஸ்ரத் சுல்தான் சிக்கந்தர் பாதுஷா பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் மலையின் மீது உள்ள சிக்கந்தர் பள்ளிவாசலில் கந்தூரி (ஆடு பலியிடுவதற்கு) கொடுப்பதற்கு அனுமதி கோரி மனு அளிக்கப்பட்டது. மேற்படி கோரிக்கை மறுக்கப்பட்டது. எனினும், மேற்படி நபர்கள் கந்தூரி கொடுக்க முற்பட்டனர். மேற்கண்ட நபர்கள் பெரிய ரதவீதியில் வந்த போது காவல்துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் இருந்து வருகிறது.

18.01.2025 அன்று இந்து முன்னணி அமைப்பைச் சேர்ந்த 200 நபர்கள், அதன் மாநில தலைவர் காடேஸ்வர சுப்பிரமணியன் தலைமையில் ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க கட்சியினருடன் திருப்பரங்குன்றம் எஸ்.பி.மஹாலில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டு, அனுமதி பெறாமல், திருப்பரங்குன்றம் கோவில் வந்து திரும்பியபோது, அவர்களுக்கு எதிராக திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணையில் இருந்து வருகிறது.

மதுரை மாவட்ட ஆட்சியரிடம் கடந்த 27.01.2025 அன்று திருப்பரங்குன்றம் அனைத்து கட்சி நிர்வாகிகள் என்று திருப்பரங்குன்றம் கிராமத்தைச் சார்ந்த 11 நபர்கள் தங்களது கிராமத்தில் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக இருப்பதாகவும், வெளி நபர்கள் யாரும் தங்களது ஊரில் நடைமுறையில் உள்ள வழிபாட்டு முறைகள் குறித்து தலையீடு செய்யாமல் இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டனர்.

அதன் அடிப்படையில், திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை கூட்டம் கடந்த 30.01.2025 அன்று உள்ளூரைச் சேர்ந்த மேற்படி நபர்களை (சி.பி.எம், தி.மு.க, அ.இ.அ.தி.மு.க. காங்கிரஸ், ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட், திர்ணாமுல் காங்கிரஸ், மக்கள் நீதி மய்யம், மனித நேய மக்கள் கட்சி, இந்திய முஸ்லீம் லீக், வி.சி.க. கட்சியின் பிரதிநிதிகள்) அழைத்து ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி அமைதி பேச்சுவார்த்தை கூட்டத்தில் "திருப்பரங்குன்றம் நகரை சேர்ந்த இரு சமூகத்தினருக்கும் ஏற்கனவே உள்ள வழிபாட்டு நடைமுறைகளை (தனிப்பட்ட முறையில் கந்தூரி கொடுப்பதை) தொடர்ந்து பின்பற்றவும், அதில் வெளிநபர்கள் யாரும் தலையிட்டு குழப்பம் ஏற்படுத்துவதை அனுமதிக்க மாட்டோம் என அனைவரும் (அ.இ.அ.தி.மு.க பிரதிநிதி மட்டும் கையொப்பம் இட மறுப்பு தெரிவித்து சென்றுவிட்டார்) தெரிவித்துக் கொள்கிறோம்" என எழுத்துபூர்வமாக தெரிவித்தனர்.

இந்தச் சூழலில் 04.02.2025 அன்று இந்து முன்னணி அமைப்பினர் "மலையை காப்போம், திருப்பரங்குன்றம் புனிதம் காப்போம்" என்பதை வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி கோரிய மனுவிற்கு காவல் துறையினரால் அனுமதி மறுக்கப்பட்டது. இந்து அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் சமூக வலைதளங்களில் தங்களது சமூகத்தை அழைத்து, மலையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி பல்வேறு செய்திகளை பதிவேற்றி வந்தனர்.

இந்து முன்னணி அமைப்பினர், இந்துக்கள் மற்றும் இதர ஆதரவு அமைப்புகளையும் தென் மாவட்டங்களான, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, திண்டுக்கல் ஆகியவற்றிலிருந்தும், மதுரை மாவட்டத்தின் பிற பகுதிகளிலிருந்தும் மற்றும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த நபர்களையும் ஒன்று திரட்டி திருப்பரங்குன்றம் சுப்பிரமணி சுவாமி கோவில் முன்பு உள்ள 16 கால் மண்டபத்தின் அருகே ஆர்ப்பாட்டம் செய்ய ஆயத்தம் செய்தனர். எனவே, மத நல்லிணக்கத்தை பேணும் பொருட்டும், அசாதாரண சூழ்நிலை உருவாக வாய்ப்புள்ளது என்பதாலும், பொது அமைதியினை பாதுகாக்கும் பொருட்டும், மனித வாழ்வு, பொதுப் பாதுகாப்பு மற்றும் அமைதியை கருத்தில் கொண்டும், மதுரை மாவட்டம் மற்றும் மாநகர் முழுவதும் வெளிநபர்கள் யாரும் பிரவேசிக்காத வகையில் 03.02.2025 காலை 06.00 மணி முதல் 04.02.2025 இரவு 12.00 மணி வரை இரண்டு நாட்களுக்கு மட்டும், 163 BNSS (144 CrPC) தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

போராட்டம் நடத்த அனுமதி மறுத்ததை எதிர்த்து சில இந்து அமைப்பினர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கின் உத்தரவில் பழங்காநத்தம் சந்திப்பில் 04.02.2025 மாலை 05.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை ஆர்பாட்டம் நடத்த அனுமதி அளித்து உத்தரவிடப்பட்டது. அதன்படி, மேற்படி இடத்திற்கு தேவையான பாதுகாப்பு அளிக்கப்பட்டு, இந்து முன்னணியின் மாநில இணை அமைப்பாளர் தலைமையில் சுமார் 3000 நபர்கள் கலந்து கொண்டு, ஆர்பாட்டம் முடிந்து கலைந்து சென்றனர்.

திருப்பரங்குன்றம் கிராமப் பகுதியை சேர்ந்த அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாகவும், மதச்சார்பின்றியும், மத நல்லிணக்கத்தை பேணும் வகையில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால், வெளியூரை சேர்ந்த இரு தரப்பை சார்ந்த அமைப்பினர்கள் அப்பகுதி மக்களுடைய பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க முயற்சிப்பதை கட்டுப்படுத்தவும், பொது அமைதி மற்றும் மத நல்லிணகத்தை பேணவும், அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.



வேலூர் மாவட்டம் குடியாத்தம் சட்டமன்ற தொகுதி பேர்ணாம்பட்டு தெற்கு ஒன்றியம் பெரிய கொம்மேஸ்வரம் ஊராட்சி கிராமத்தில் குடி நீர் மேல் தேக்கத் தொட்டி திறப்பு தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.டி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக வேலூர் மாவட்ட செயலாளர் ஏ.பி.நந்தகுமார் அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார். இதில் குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி.அமுலு, ஒன்றிய குழு பெருந்தலைவர் ப.ச.சுரேஷ் துணை தலைவர் திருமதி.சாந்தி சீனிவாசன், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.தீபா ராசன் பாபு ஊராட்சி மன்ற தலைவர் திருமதி.சோபனா கோவிந்தராஜ் மாவட்ட பிரதிநிதி ராசன்பாபு, ஒன்றிய நிர்வாகிகள் சிவகுமார், சேகர், வடிவேல், சேகர் திருமால், ரஞ்சித், குமரேசன் மற்றும் ஒன்றிய, நிர்வாகிகள், கிளை கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.